**தலைப்பு 273 - புத்தளம் மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன புத்தளம் மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 273 – புத்தளம் மாவட்டச் செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 12 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக புத்தளம் மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| **நிதிப்பிரமாணம்** | **நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை | 2.14 |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடைந்துகொள்ளாமை | 2.3(அ) |
| | | 3. எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அறிந்துகொள்ளாமை. | 2.3(ஆ) |
| | | 4. செயற்பாடுகளினை செயற்படுத்துவதில் தாமதங்கள் | 2.3(இ) |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் | 1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடைந்து கொள்ளாமை | 2.3(அ) |
| | | 2. செயற்திட்டங்களினை செயற்படுத்துவதில் தாமதங்கள் | 2.3(இ) |
| | | 3. பெறுகை நடைமுறையினை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் | 2.4.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றமை. | 4.<br>5. | பொது மக்களுக்கு சேவைகளினை வழங்குவதில் பலவீனங்கள்<br>முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.10<br>2.5 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும். | 1.<br>2. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை<br>இணங்காமைகள் | 2.14<br>2.15 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றமையும். | | நிறுவையாகவுள்ள கடன் மீதிகளினை அறவீடு செய்யாமை | 2.12 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றன என்பதுவும். | | சொத்துக்களின் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(கி) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதும் நிதிப் பிரமாணம் 156(1) இன் | | நட்டங்களும் சேதங்களும் | 2.6 |

பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன என்பதும் ஆகும்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவம்வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

---

(அ) மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துதல்.

(ஆ) மாவட்டச் செயலகம், அரசாங்கத்தின் பிரதான ஒருங்கிணைப்பு நிறுவனம் என்ற வகையில் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அரசாங்க நியதிகளுக்கு இணங்கும் விதத்தில் அமுல்படுத்துதல், செயன்முன்னேற்றங்களை மீளாய்வுசெய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

(இ) அந்தந்த சந்தர்ப்பங்களில் விதிக்கப்படும் நியதிச்சட்ட கட்டளைகள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல்.

(ஈ) மக்களின் சட்டம், ஒழுங்கினைப் பேணுவதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரச பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

(உ) அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள், அமைச்சுக்கள் என்பவற்றினது மாவட்டப் பிரதான முகவர் நிறுவனம் என்ற வகையில் அவற்றின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி ஒருங்கிணைப்புச் செய்தல்.

(ஊ) அரசாங்க வருமானக் கணக்களிப்பு தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தராக அரசாங்க வருமானத்தைச் சேகரித்து கணக்கீடு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவகங்கள் மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய தொழிற்பாடுகள்

---

மாவட்ட செயலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவகங்கள் மற்றும் அந் நிறுவகங்களின் தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவகங்கள் | ஸ்தாபிப்பதற்கான அதிகாரம் | தொழிற்பாடுகள் |
| --- | --- | --- |
| (i) வென்னப்புவ பிரதேச செயலகம்<br>(ii) நாத்தாண்டிய பிரதேச செயலகம்<br>(iii) தங்கொட்டுவ பிரதேச செயலகம்<br>(iv) மஹாவெவ பிரதேச செயலகம்<br>(v) மாதம்மை பிரதேச செயலகம்<br>(vi) சிலாபம் பிரதேச செயலகம்<br>(vii) அர்ச்சிக்கடுவ பிரதேச செயலகம்<br>(viii) முந்தல் பிரதேச செயலகம்<br>(ix) பல்லம பிரதேச செயலகம்<br>(x) மஹகும்புக்கடுவல பிரதேச செயலகம்<br>(xi) கருவலகஸ்வெவ பிரதேச செயலகம்<br>(xii) கற்பிட்டி பிரதேச செயலகம்<br>(xiii) புத்தளம் பிரதேச செயலகம்<br>(xiv) ஆனமடுவ பிரதேச செயலகம்<br>(xv) வனாத்தவில்லு பிரதேச செயலகம்<br>(xvi) நவகத்தேகம பிரதேச செயலகம் | 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரப் பரவலாக்கல் (பிரதேச செயலகம்) அதிகாரச் சட்டம். | பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு, காணி பிரிவு, கணக்குகள் பிரிவு, பதிவாளர் பிரிவு, சமூக நலன்புரி மற்றும் அபிவிருத்தி பிரிவு, திவிநெகும பிரிவு, மற்றும் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி போன்ற பிரிவுகளின் ஊடாக பிரதேசங்களின் சேவை நாடுநர்களான பொது மக்களால் எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் பிரதேச செயலக செயலாளரிற்கு எழுத்துமூலம் அல்லது ஒதுக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் செயற்பாடுகள் மற்றும் பணிப்பொறுப்புக்களை அப்பிரிவின் மூலம் உள்ளடக்கி நிறைவேற்றுதல் |

## 2.3 செயற்படுத்தப்படாத தொழிற்பாடுகள்

### (அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைந்துகொள்ளாமை

ரூபா 1.97 மில்லியன் இனங்கப்பட்ட பெறுமதியொன்றில் அர்ச்சிக்கடுவ பிரதேச செயலகத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட புருதகல கம்பஹாவத்த வீதியை கொங்றீட்டிடல், விஜயா கடுபொத அலன் எகொடா வீதியை கொங்கிறீட்டிடல், பங்கதெனிய கும்புடுகுளிய வீதியை புலக்கற்கள் (தொகுதிக் கற்கள்) இடுவதன் மூலம் அபிவிருத்திசெய்தல் மற்றும் புலக்கற்கள் (தொகுதிக் கற்கள்) இடுவதன்மூலம் திகன்வெவ வீதியின் அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினைப் பெற்றுக்கொள்ளாது ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை (Outcome) அடைந்துகொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட ஹம்மன்டலுவ குடிநீர் செயற்திட்டம் மற்றும் புளியங்குளம் நீர் செயற்திட்டத்திற்கு ரூபா 2.6 மில்லியன் ஒதுக்கீடொன்று ஏற்பட்டிருந்தபோதிலும், செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 30 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டமை காரணமாக பொது நலன்பெறுநர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட வெளீயீடு கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அர்ச்சிக்கடுவ மன்வேறிய பிரதேசத்தில் ஓய்வு இல்ல வளாகத்தினைச் சுற்றி கம்பி வேலியொன்று (grill fence) மற்றும் வலை வேலியொன்றின் (net fence) நிர்மாணத்திற்கு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கத்தோலிக்க விவகாரங்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா 6.19 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்தது. ஆனால் நிர்மானிக்கப்பட்டட வேலியின் கீழ்ப்புற வரிசைக்கும் தரை மட்டத்திற்குமிடையே 03 அடி

இடைவெளியொன்று காணப்பட்டது. இடைவெளிக்குள் மண்ணை நிறப்பியிராது வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iii) கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சின் ஒதுக்கீட்டில் கற்பிட்டி கிரிமுன்டலம பிரதேசத்தில் வீடொன்று ரூபா 300,000 மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 50 வீடுகளுடன் கடற்றொழில் கிராமமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 15 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீட்டினது கிரயம் ரூபா 544,113 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 254,113 மீதியை செலுத்துவதற்கு பயனாளிகள் அறிவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அதனைச் செலுத்துவதற்கு அவர்கள் நிதிரீதியில் வலிமையுடையவர்களாகக் காணப்படவில்லை. 2017 நவம்பர் 06 அளவில் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், முழுச் செயற்திட்டத்தையும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், வீட்டுப் பயனாளிகள் பிரதேசத்திலுள்ள உண்மையான மீனவர்களாகக் காணப்படுகின்றனரா என்பதை உறுதிப்படுத்தமுடியாதிருந்தது.

(iv) ஆனமடுவ நாடக அரங்கத்தின் நிர்மாண வேலைகள் ரூபா 30.0 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 2014 ஒக்தோபர் 07 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 2018 யூன் 12 வரை ரூபா 22.2 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(v) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டட ஏற்பாடுகளின் கீழ் ரூபா 12.7 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்ட கற்பிட்டி பஸ்தரிப்பு நிலையம், சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் ரூபா 52.7 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்ட மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையம் மற்றும் ரூபா 14 மில்லியன் கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட கற்பிட்டி வாராந்த சந்தை போன்ற நிர்மாண செயற்திட்டங்கள் பூர்த்தியடைந்திருந்ததுடன் பயன்படுத்தப்படாத அல்லது வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் விளைவற்ற செலவினமொன்றாகியது.

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்ட செயலகத்தினால் 5 செயற்திட்டங்களினை நிறைவேற்றுவதற்கு ரூபா 4.36 மில்லியன் தொகையொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களினை நிறைவேற்றும்போது நியமத்தரத்திலான மூலப்பொருட்கள் கிடைக்காமை மற்றும் பிரதிகூலமான காலநிலை என்பன செயற்திட்டங்களினைப் பூர்த்திசெய்வதில் தாக்கமளித்திருந்ததுடன் தாமதங்கள் 07 நாட்கள் தொடக்கம் 2½ மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களின் சொத்துக்கள் மீதான மாதிரி பரீட்சிப்புக்களில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யாமை**

சிலாபம் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான வாகனங்களின் பாதுகாப்பு, பாதுகாப்பற்றதாக பிரதேச செயலக அலுவலக வளாகத்தில் அந்த வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை காரணமாக பிரச்சினையொன்றில் காணப்படுகின்றது.

**(ஆ) அரசாங்க சொத்துக்களின் சுரண்டல்**

முந்தல் பிரதேச செயலகத்திலுள்ள கொந்தன்தீவு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 598 ஆம் இலக்க 31.401 ஹெக்டெயர் பரப்பினையுடைய அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி நபரொருவரினால் சட்ட விரோதமாக சூரையாடப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி சேவைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க சொத்துக்களின் பெறுமதி மற்றும் தரம் குறைவடைவு**

நாத்தாண்டிய பிரதேச செயலகத்திலுள்ள பழைய பிரதேச செயலாளர் விடுதிகள் முறையாகப் பேணப்பட்டிருக்காததுடன் அங்குள்ள கட்டிடங்கள் அழிவடைந்தும் காணப்படுகின்றது.

**(ஈ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்தின் 10 வாகனங்கள் 03 வருடங்களுக்கும் அதிகமாக பயன்படுத்தப்படாது மாவட்ட செயலகத்தில் அல்லது பிரதேச செயலக அலுவலகங்களில் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்தது.

**(உ) கையளிக்கப்படாத சொத்துக்களினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

மாவட்ட செயலகத்திற்கு ஏனைய நிறுவகங்களினால் வழங்கப்பட்ட கப் வண்டியொன்றும், லொறியொன்று மற்றும் பவுசரொன்று முறையானதொரு மாற்றத்தினைச் மேற்கொண்டிராது பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2017 இல் மஹாகும்புக்கடுவலயிலுள்ள கவயன்குளம் கிராமத்தில் ‘‘சமூக’’ சமுதாய அடிப்படையிலான நிறுவனத்திற்கு குழாய்க் கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கிணறு நீரின் நியமத்தினைப் பரிசோதித்திருக்காது நீர் மோட்டார் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவுசெய்யப்பட்டு ரூபா 334,675 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் நல்ல நியம மட்டத்தில் காணப்படவில்லை. ஆகையினால், கொள்வனவுசெய்யப்பட்ட மோட்டார் மற்றும் உதிரிப்பாகங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

**2.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

மாதிரி தெரிவுப்பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனமொன்று சாரதியின் பொறுப்பற்ற செலுத்துகை காரணமாக விபத்தொன்று நேரிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டபோதிலும், தொடர்புடைய சாரதியிடமிருந்து ரூபா 180,500 தொகையான மதிப்பிடப்பட்ட சேதங்களினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொறுப்பற்ற செலுத்துகை காரணமாக 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 03 விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமை ஆரம்ப புலனாய்வுகளில் பரிந்துரைக்கப்பட்டது. ஆகையினால், ரூபா 599,429 பெறுமதியுடைய அவற்றிற்கான சேதங்களுக்கு சாரதிகள் பொறுப்புடையவர்களாகக் காணப்படல்வேண்டும். ஆனால், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமையினால் சாரதிகளிடமிருந்து நட்டங்களினை அறவிடமுடியாதிருந்தது.

## 2.7 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் சீராக்கப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிற்கான தொடர்பு | | விடயம் | குறைபாடுகள் |
|---|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | | |
| 2016 | 3.12(ஆ) | நவகத்தேகம நாடக அரங்கம் | புறநிலை நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிராமை. |
| 2016 | 3.15(அ) | ஆனமடுவ நாடக அரங்கம் (கட்டம் I) | நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது. |

## 2.8 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

தெரிவுப் பரீட்சிப்புக்களில் பின்வரும் வினைத்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விசேட செயற்திட்டங்களுக்கு காணிகளினைக் கொள்வனவுசெய்வதற்கு அரச்சிக்கட்டுவ பிரதேச செயலகம் நீண்டகாலமொன்றை செலவிட்டிருந்தது.

(ஆ) வனாத்தவில்லு பிரதேச செயலக பிரதேசத்தில் சட்டரீதியற்றமுறையில் சூறையாடப்பட்ட அரசாங்க காணிகளை நீண்டகால வாடகைக்கு அளிப்பதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் முறைமைப்படுத்துவதற்கு அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு தொடர்புடைய கோவைகள் மாகாண காணி ஆணையாளருக்கு குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், இந்த விடயம் 2018 யூன் 12 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வனாத்தவில்லு பிரதேச செயலக பிரதேசத்தில் 81 ஏக்கர்கள், 03 றூட் மற்றும் 38 பேர்ச் பரப்பினைக்கொண்ட விவசாயக் காணியொன்று 1995 ஆம் ஆண்டிலிருந்து சட்டரீதியற்ற முறையில் சூரையாடப்பட்டிருந்ததுடன் காணித் துண்டுகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் போலியான பத்திரங்களினைத் தயாரிப்பதன்மூலம் விற்பனைசெய்யப்பட்டிருந்தது. முகாமைத்துவ மறுவிசாரணை அதிகாரச்சட்டத்தின் உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் 2013 சனவரி 12 இன் 4/10/4/3/0 ஆம் இலக்க காணி பதிவாளரின் கடிதத்தின் பிரகாரம் சட்டரீதியற்ற குடியிருப்புக்களை அகற்றுவதற்கு அல்லது உரிமைகளினை கையேற்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலாளர் உள்ளடங்கலாக உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் தீவிரமாக செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) தங்கொட்டுவ கிராமிய வீதிகளில் தாரிடல் செயற்திட்டங்கள் மதிப்பீடுசெய்யப்பட்ட அகலத்தின் பிரகாரம் தாரிடல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மதிப்பீடுகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தஞ்செய்யப்பட்டிருந்தது.

(உ) அர்ச்சிக்கடுவ, ஆனமடுவ மற்றும் வென்னப்புவ பிரதேச செயலகங்களின் செயற்திட்டங்களுக்குரிய உரிமைகளுக்கான பரீட்சிப்பினை மேற்கொள்வதில் தாமதம் மற்றும் இழப்பீடுகளினை அளிப்பதற்கிடையில் நீண்டகாலப்பகுதியொன்று செலவிடப்பட்டமை காரணமாக, இழப்பீட்டாளர்களுக்கு வட்டியாக ரூபா 20,012,831 தொகையொன்று செலுத்த வேண்டியுள்ளது.

(ஊ) புத்தளம், பலியகொட வீதியின் நிர்மாணத்திற்கு காணிகளைக் கொள்வனவுசெய்வதில் 3707, 3708 மற்றும் 3727 ஆம் இலக்க ஆரம்ப திட்டத்தில் 13 காணித்துண்டுகளுக்கு மஹாவெவ பிரதேச செயலகத்தினால் இழப்பீடுகளினை செலுத்துவதில் தாமதங்கள் காரணமாக வட்டியாக ரூபா 688,537 மேலதிக கிரயமொன்று அரசாங்கத்திற்கு ஏற்படவுள்ளது.

(எ) இறந்த அரசாங்க ஊழியரின் வயது உறுதிப்படுத்தப்பட்டிராத வயது பூர்த்தியடைந்த கனிஷ்ட பிள்ளைகளுக்குச் சொந்தமான ரூபா 1,866,517 மொத்தப் பெறுமதிக்கான 06 வங்கி கணக்கு பாஸ் புத்தகங்கள் மற்றும் ரூபா 947,754 பெறுமதியுடைய 03 வங்கிக் கணக்கு பாஸ் புத்தகங்கள் தங்கொட்டுவ பிரதேச செயலகத்தில் விடுவிக்கப்பட்டிராது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம், கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் தாமதமின்றி மேற்கொள்ளப்படவேண்டியபோதிலும், ஆனமடுவ பிரதேச செயலகத்திலுள்ள கொட்டுக்கச்சி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 649 ஆம் இலக்க காணியொன்றுக்கு சட்டரீதியற்றமுறையில் அனுமதிப்பத்திரமொன்றை விநியோகித்தமை தொடர்பில் 2016 ஏப்ரல் 06 இன் NWP/PT/A/3,4/ආණ්.ප්‍රා.ලේ./2017පෙත්සම් පරීක්ෂාව/2017/575 ஆம் இலக்க கடிதம் தொடர்பில் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தனியார் காணியொன்றிலுள்ள ராஜகந்தலுவ, மானவோறிய ஈஸ்வர் கோயிலுக்காக மலசலகூட முறைமையொன்று நிர்மாணிக்கப்பட்டதுடன் ரூபா 3.77 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 2.9 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

1996 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியின்போது இடம்பெற்ற 25 வாகன விபத்துக்களுடன் தொடர்புடைய கோவைகள் மாவட்ட செயலகத்தில் கிடைக்கக்கூடியதாக காணப்படவில்லை. ஆகையினால், ரூபா 2 மில்லியனுக்கு பெறுமதியிடப்பட்ட அவற்றின்மீதான நட்டங்களினை திருப்திகரமாக மெய்மையாய்வுசெய்ய முடியாதிருந்தது.

## 2.10 பொது மக்களுக்காக செயற்படுத்தப்பட்ட சேவைகள்

பயனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் பெறப்பட்ட திரவத்தெளிப்பு இயந்திரங்கள், முன்பள்ளி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இருப்பு என்பன பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிராது பல்வேறு ஆண்டுகளாக நாத்தாண்டிய பிரதேச செயலக அலுவலகத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.

## 2.11 செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளினைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின்போது மாவட்ட செயலகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் பயன்படுத்துகை மற்றும் சேமிப்புக்கள் தொடர்பிலான தகவல்களுடன் அவற்றின் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாகச் சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | சதவீதம் |
| 2013 | மீண்டெழுபவை | 502.96 | 501.95 | 1.01 | 0.20 |
| | மூலதனம் | 63.20 | 61.43 | 1.77 | 2.80 |
| | **மொத்தம்** | **566.16** | **563.38** | **2.78** | **0.49** |
| 2014 | மீண்டெழுபவை | 488.23 | 483.97 | 4.26 | 0.87 |
| | மூலதனம் | 38.40 | 37.44 | 0.96 | 2.50 |
| | **மொத்தம்** | **526.63** | **521.41** | **5.22** | **0.99** |
| 2015 | மீண்டெழுபவை | 627.65 | 621.73 | 5.92 | 0.94 |
| | மூலதனம் | 57.30 | 57.25 | 0.05 | 0.08 |
| | **மொத்தம்** | **684.95** | **678.98** | **5.97** | **0.87** |
| 2016 | மீண்டெழுபவை | 649.64 | 644.80 | 4.84 | 0.74 |
| | மூலதனம் | 75.00 | 64.33 | 10.67 | 14.22 |
| | **மொத்தம்** | **724.64** | **709.13** | **15.51** | **2.14** |
| 2017 | மீண்டெழுபவை | 642.14 | 640.57 | 1.57 | 0.24 |
| | மூலதனம் | 95.00 | 92.50 | 2.50 | 2.63 |
| | **மொத்தம்** | **737.14** | **733.07** | **4.07** | **0.55** |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் வழங்கப்பட்ட நிதிகளினை பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 31 அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்களினால் முறையே ரூபா 3,778 மில்லியன் மற்றும் ரூபா 193 மில்லியன் தொகையான ரூபா 3,971 மில்லியன் மொத்த ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. அதில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,050 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையினால், மொத்த ஏற்பாட்டில் ரூபா 921 மில்லியன் தொகையொன்று அல்லது 23 சதவீதம் சேமிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளில், மீளாய்வாண்டின் இறுதியில் மீண்டெழும் செலவின ஏற்பாடுகளிலிருந்து 10 சதவீதமும் மூலதன செலவின ஏற்பாடுகளிலிருந்து 32 சதவீதமும் சேமிக்கப்பட்டது. ஆகையினால், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளினை அடைந்துகொள்வற்கு பெறப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 3,600,000 மொத்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான மூலதன ஏற்பாடாக ரூபா 2,381 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், திறைசேரி ஆண்டின் இறுதி காலாண்டில் தொடர்புடைய ஏற்பாட்டில் ரூபா 1,553 மில்லியன் கட்டுநிதியை மாத்திரம் விடுவித்திருந்தது. ஆகையினால், மாவட்ட செயலகத்தினால் சிக்கனமான வழிமுறையில் மூலதன ஏற்பாட்டினை விரைவாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கும் போதுமான காலம் காணப்படவில்லை.

**2.12 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**நிலுவையாகவுள்ள மீதிகளினை அறவீடுசெய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், இடமாற்றம் பெற்றுச்சென்றவர்களின் மீதிகளினைத் தவிர அந்த திகதியில் மொத்த நிலுவையாகவுள்ள பெறவேண்டிய மீதி ரூபா 2,212,072 ஆகக் காணப்பட்டதுடன் அந்த மீதிகள் 01 வருடம் தொடக்கம் 05 வருடங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதிக்கு தொடர்ந்தும் காணப்படுகின்றது. ஆனால் அந்த மீதிகளின் அறவிடுகையிலுள்ள பிற்போடப்பட்ட அவதானிப்பு செயற்பாடுகள் தொடர்ந்தும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது.

**2.13 பொது வைப்புக் கணக்கு**

புத்தளம், தங்கொட்டுவ, வனாத்தவில்லு, கற்பிட்டி மற்றும் முந்தல் பிரதேச செயலகங்களில் (காணி வைப்புக்கள் தவிர) 02 வருடங்களுக்கும் அதிகமாக தொடர்ந்தும் காணப்படும் ரூபா 2.44 மில்லியன் மொத்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.14 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

பின்வரும் பதிவேடுகள் புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| அலுவலக தொலைபேசிகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்படவில்லை. |
| வாகன பட்டியல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்படவில்லை. |
| பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | 2.11.2 ஆம் பெறுகை வழிகாட்டல்கள் | பேணப்படவில்லை. |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) | நாளதுவரையாக்கப் படவில்லை. |
| கணனிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்ப டவில்லை. |
| திணைக்கள ஒதுக்கீட்டு (நியம வாக்குப்பணம்) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்ப டவில்லை. |
| நட்டங்களுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்ப டவில்லை. |
| பொறுப்புக்களுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | நாளதுவரையாக்கப்ப டவில்லை. |
| கடன் பதிவேடு | நிதிப்பிரமாணம் 485 | நாளதுவரையாக்கப்ப |

டவில்லை.

## 2.15 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வுசெய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை | |
| பந்தி vii இன் 10 ஆம் உப பிரிவு | கருவலகஸ்வெவ, கற்பிட்டி, புத்தளம் மற்றும் நவகத்தேகம பிரதேச செயலக அலுவலகங்களில் உத்தியோகத்தர்களினால் வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறைகளில் வேலைபுரிவதற்கு திணைக்கள தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | |
| 2001 ஆகஸ்ட் 22 இன் 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 05 வருடங்களுக்கும் அதிகமாக ஒரே வேலைத்தளமொன்றில் வேலைபுரியும் உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படவேண்டியபோதிலும், ஆனால் மேற்குறித்த பிரமாணங்கள் மஹகும்புக்கடுவல பிரதேச செயலகத்திலுள்ள 07 உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) தேறிய பாதீட்டு சுற்றறிக்கைகள் | |
| 2013 யூலை 07 இன் பீடீ/ஜிபீஎஸ்/130/9/14எஸ்சி-ii ஆம் இலக்க மற்றும் 2016 சனவரி 06 இன் பீடீ/ஜீபிஎஸ்/130/14/எம்சி-ii ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளரின் கடிதங்கள் | மோட்டார் சைக்கிள்களினைப் பெற்ற கள உத்தியோகத்தர்கள் (field officers) மோட்டார் சைக்கிள் படியினைக் கொண்டிராத பதவியொன்றிற்கு இடமாற்றப்படும்போது மோட்டார் சைக்களின் சந்தைப் பெறுமதியினை செலுத்தவேண்டியபோதிலும், மேற்குறித்த பிரமாணங்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) ஏனைய சுற்றறிக்கைகள் | |
| 1999 ஏப்ரல் 09 இன் 1/99 ஆம் இலக்க மாவட்ட நிர்வாகச் சுற்றறிக்கை. | நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் ஊழியர்களிடமிருந்து வைப்புக்களினை பெறுகின்றதன்பேரில் உத்தியோகத்தரொருவரிடமிருந்து அதிஇழிந்த ரூபா 1,000 வைப்பினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.16 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணம் 128 இல் சுட்டிக்காட்டப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்களினை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் அவரின் கீழுள்ள திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வு அலகினை ஸ்தாபிக்கவேண்டுமென நிதிப்பிரமாணம் 133 கவனஞ்செலுத்துகின்றது.

தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் வருடமொன்றில் 02 தடவைகள் 16 பிரதேச செயலகங்களில் கணக்காய்வுகளினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2017 இல் 04 பிரதேச செயலகங்களில் எவ்வித கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 14 பிரதேச செயலகங்களில் கணக்காய்வு ஒரு தடவை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.17 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியத்திற்கான செலவினம்**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணியினர், வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு. திணைக்களம் மீளாய்வாண்டின்போது சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக ரூபா 571 மில்லியன் செலவழித்திருந்தது. ஆகையினால், நபரொருவருக்கான செலவினம் ரூபா 376,763 ஆகக் காணப்பட்டது.

| **ஊழியர்களின் வகை** | | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைப் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 76 | 65 | 11 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 42 | 16 | 26 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,572 | 1,283 | 289 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 175 | 143 | 32 | - |
| (v) | ஏனையவை (அமைய/ ஒப்பந்த / தற்காலிக அடிப்படை) | 08 | 09 | - | 01 |
| **மொத்தம்** | | **1,873** | **1,516** | **358** | **01** |

முறையான அங்கீகாரமின்றி, பிரதேச செயலகம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஒப்பந்த அடிப்படையில் ஊழியரொருவரை ஆட்சேர்ப்புச்செய்திருந்தது.

**2.18 நிதிக் கட்டுப்பாடுகளுக்காக தொழிற்பாடுகளினை கையளித்தல்**

நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம், கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்ளகக் கட்டுப்பாட்டின் போதுமைத்தன்மை தொடர்பில் அதிகாரக் கையளிப்புக்களினை மேற்கொள்ளவேண்டியபோதிலும், நவகத்தேகம பிரதேச செயலகத்தில் CIGAS கணனி பொதி, சம்பளங்களின் தயாரிப்பு, வங்கி இணக்கத்தின் தயாரிப்பு உத்தியோகத்தரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஷெராப் (Shroff) கடமைகள்

மற்றும் களஞ்சிய செயற்பாடுகள் மற்றுமொரு உத்தியோகத்தரொருவருக்கும் கையளிக்கப்பட்டிருந்தது.